# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் I பரீட்சை – 2021 சனவரி

## (103) பொருளியல்

## பகுதி A

### வினா இல. 01

இப்பகுதியானது பாடத்திட்டத்துடன் தொடர்புடைய பொருளியல் கோட்பாடுகள் மற்றும் எண்ணக்கருக்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்கள் தரப்பட்ட விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்யுமாறு கேட்டிருந்தது. வினா இல. **1.11** உம் **1.12** உம், அடைப்புக்குறிக்குள் தரப்பட்ட இரண்டு விடைகளிலிருந்து சரியானதைத் தெரிவு செய்யுமாறு கேட்டிருந்தது. இல. **1.13** தொடக்கம் **1.15** வரையான வினாக்களில் தரப்பட்ட கூற்றுக்கள் சரியானதா, தவறானதா எனக் குறிப்பிடும்படி கேட்கப்பட்டது. இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களுக்கு குறு விடைகளை எழுதுமாறு கேட்கப்பட்டது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு உண்மையிலே நல்ல விதமாக விடைகளை எழுதி யிருந்தனராயினும் சிலர் விடையளிக்கும்போது தவறுகளையும் விட்டிருந்தனர். அவதானிக்கப்பட்ட பொதுவான குறைபாடுகள் கீழே தரப்பட்டுள்ளன :

**(1.1)** இவ்வினாவின் மூலம் பொருளாதாரப் பண்டம் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு பரீட்சிக்கப்பட்டது. பெருமளவான பரீட்சார்த்திகள் சரியாக விடையளித்து இவ்வினாவுக்காக ஒதுக்கப்பட்டிருந்த புள்ளிகளைப் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் தவறான விடைகளை அளித்திருந்தனர்.

**(1.2)** இவ்வினா ''அரிதான தன்மை'' பற்றிப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் ''*அரிதான தன்மை என்பது மனிதத் தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்திசெய்வதற்கான வளங்களின் வரையறுக்கப்பட்ட கிடைப்பனவு*'' எனக் குறிப்பிட்டு, புள்ளிகளை பெற்றிருந்தனர்.

**(1.3)** இங்கு ''சந்தர்ப்பச் செலவு'' என்பதன் சரியான வரைவிலக்கணத்தை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. அதிகமானவர்கள் இவ்வினாவுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்திருந்தனர்.

**(1.4)** இவ்வினாவின் மூலம் பயன்பாட்டு எண்ணக்கரு பற்றி பரீட்சிக்கப்பட்டது. ''மொத்தப் பயன்'' பற்றிய விளக்கம் அதிகளவான பரீட்சார்த்திகளிடம் காணப்படவில்லை என்பதை அவர்களது விடைகளில் இருந்து அவதானிக்க முடிந்தது. சிறு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே இதனைச் சரியாகப் புரிந்துகொண்டிருந்தனர்.

**(1.5)** இவ்வினாவின் மூலம் கேள்வி நெகிழ்ச்சி பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது. எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகளால் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெற முடிந்திருந்தது.

**(1.6)** இவ்வினாவின் மூலம் 'நுகர்வோர் மிகை' மற்றும் 'உற்பத்தியாளர் மிகை' என்பன பரீட்சிக்கப்பட்டன. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குச் சரியாக விடையளித்து ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர். எவ்வாறாயினும், இந்த எண்ணக்கரு பற்றிய சரியான புரிதல் இல்லாத மிகச் சில பரீட்சார்த்திகளால் சரியான விடையை அளிக்க முடியவில்லை. அவர்கள் வழங்கப்பட்ட வரைபு பற்றிக் குழப்பமடைந்திருந்தனர்.

**(1.7)** இவ்வினாவில் இலத்திரனியல் பணம் பற்றிப் பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். பெரும்பாலானவர்கள் சரியாக விடையளித்திருந்த துடன் இதற்கு ஒதுக்கப்பட்டிருந்த புள்ளிகளையும் பெற்றுக்கொண்டனர்.

**(1.8)** இவ்வினா கேள்விக் கோட்பாடு பற்றிய அறிவைப் பரீட்சித்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குத் தவறான விடைகளை வழங்கியிருந்தனர். ஒரு கையளவு பரீட்சார்த்திகளால் மாத்திரமே சரியாக விடையளிக்க முடிந்திருந்தது.

**(1.9)** இவ்வினா சென்மதி நிலுவை கூற்று பற்றிய அறிவைப் பரீட்சித்தது. சரியான விடையான ‘‘நேரடி வெளிநாட்டு முதலீடுகள்’’ என்பதற்குப் பதிலாக ‘‘அரசாங்க மானியங்கள்’’ என்ற தவறான விடையைத் தெரிவுசெய்திருந்ததன் காரணமாக குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளால் புள்ளிகளைப் பெற முடியவில்லை.

**(1.10)** இது மத்திய வங்கி அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட நடைமுறை வினாவாகும். அதிகளவான பரீட்சார்த்திகளால் சரியான விடையான “2.3%” என்பதைத் தெரிவுசெய்ய முடியவில்லை. ஒரு சில பரீட்சார்த்திகளால் மாத்திரமே சரியான விடையை இனங்காண முடிந்திருந்தது.

**(1.11)** இவ்வினா எல்லை வருமானம் மற்றும் எல்லைக் கிரயம் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் ‘‘எல்லைக் கிரயம்’’ எனச் சரியாகத் தெரிவு செய்திருந்தனர்.

**(1.12)** ‘‘நுகர்வோர் வருமானம் அதிகரிக்கும்போது, கேள்வி வளையி வலது பக்கமாக நகரும்’’. இதுவே சரியான விடையாகும். அதிகளவானவர்கள் சரியான விடையை அளித்து இதற்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**(1.13) - (1.15)**

இங்கு தரப்பட்ட கூற்றுக்கள் சரியானதா அல்லது தவறானதா எனக் குறிப்பிடும்படி கேட்கப்பட்டது. இப்பகுதிக்கு மிகவும் வெற்றிகரமாக விடைகள் அளிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இல. **1.14** இல் தரப்பட்ட கூற்று சரியானதாக இருந்தபோதிலும் அக்கூற்று தவறானது என அதிகளவான பரீட்சார்த்திகள் குறிப்பிட்டிருந்தனர். அதேபோன்று இல**. 1.15** இல் தரப்பட்ட கூற்று தவறானதாக இருந்தபோதிலும் பெரும்பாலானவர்கள் அது சரியான கூற்று எனக் குறிப்பிட்டிருந்தனர். பரீட்சார்த்திகளிடம் கேள்வி நெகிழ்ச்சி பற்றிய அறிவு குறைவாக இருந்ததையே அவர்கள் அளித்த விடைகளிலிருந்து அவதானிக்க முடிந்தது.

**(1.16)** இவ்வினா நிரம்பல் வளையியை நகர்த்துவது பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. எவ்வாறாயினும், நிரம்பல் எண்ணக்கரு பற்றிய சரியான புரிந்துணர்வு இன்மையால், அதிகளவான பரீட்சார்த்திகள் தவறான விடையினை அளித்திருந்தனர். வழங்கல் செய்யப்பட்ட பொருட்களுக்கான கேள்வியை அதிகரித்தல், மூலப் பொருட்களைக் கொண்டிராமை போன்ற சம்பந்தமற்ற விடைகளை அளித்திருந்த சில பரீட்சார்த்திகளால் எவ்வித புள்ளிகளையும் பெற முடியவில்லை.

**(1.17)** ‘*கேள்விக் கணியத்தில் மாற்றம்*’ என்னும் பதத்தை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. சிலர் வருமான அதிகரிப்பு அல்லது குறைவு காரணமாக கேள்வியில் ஏற்படும் மாற்றம், விலை மாறாது இருக்கும்போதான பிற காரணிகளின் மாற்றம் போன்ற தவறான விடைகளைக் குறிப்பிட்டிருந்தனர்.

**(1.18)** இது அளவுத்திட்ட விளைவுக் கோட்பாடு பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகளால் இதற்கான புள்ளிகளைப் பெற முடியவில்லை. குறிப்பிடத்தக்களவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருக்கவில்லை.

**(1.19)** இவ்வினாவின் மூலம் எல்லை வருமானம் பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இதற்குச் சரியான விடை அளிக்கவில்லை.

**(1.20)** இவ்வினாவில் அரசாங்கம் சந்தையில் தலையீடு செய்யும் வழிகள் பற்றிக் கேட்டிருந்தது. எவ்வாறாயினும், அதிகளவான பரீட்சார்த்திகளால் இதற்குச் சரியான விடை அளிக்க முடியவில்லை. சில பரீட்சார்த்திகள் வணிகங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுதல் போன்ற சம்பந்தமற்ற விடைகளைக் குறிப்பிட்டிருந்ததால் அவர்களால் புள்ளிகள் எதனையும் பெற முடியவில்லை.

## <u>பகுதி B</u>

### வினா இல. 02

**(a)** உற்பத்திக் காரணிகள் பற்றி பரீட்சார்த்திகள் மிகச் சிறந்த புரிதலைக் கொண்டிருந்ததை அவர்கள் அளித்த விடைகளிலிருந்து அவதானிக்கக்கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், வீட்டுத் துறை, அரச துறை, வணிகத் துறை மற்றும் வெளிநாட்டுத் துறை போன்ற தவறான விடைகளை வழங்கிய பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர்.

**(b)** சந்தைப் பொருளாதாரமொன்றின் பண்புகள் பற்றிப் பரீட்சிக்கப்பட்டது. சிலர் சந்தைப் பாதுகாப்புவாதத்தின் முறை ஒன்றாக கேள்விக்கேற்ப வழங்கலைச் செய்தல், விலை மற்றும் கேள்விக்கிடையில் பாதகமான விளைவொன்றைக் கொண்டிருத்தல் போன்ற தவறான விடைகளை வழங்கியிருந்ததால் அவர்களால் புள்ளிகளைப் பெற முடியவில்லை. எவ்வாறாயினும், குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

### வினா இல. 03

**(a)** இவ்வினா கேள்வி மற்றும் நிரம்பல் கோட்பாடுகள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. பண்டமொன்று தொடர்பான கேள்வி மற்றும் நிரம்பல் சமன்பாடுகள் தரப்பட்டு சமநிலை விலை மற்றும் கணியம் என்பவற்றை இனங்காணுமாறு கேட்கப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் சமன்பாடுகளைச் சரியாகத் தீர்த்திருந்த அதே வேளை குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளால் சமன்பாடுகளைத் தீர்க்க முடியவில்லை. சில மாணவர்களால் இவ்வினாவுக்கு எவ்வித புள்ளிகளையும் பெற இயலவில்லை.

**(b)** இவ்வினா உற்பத்திச் செயன்முறையிலுள்ள நீண்டகால ஓட்டம் மற்றும் குறுங்கால ஓட்டம் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டைப் பரீட்சித்திருந்தது. இதனைப் பெரும்பாலான பரீட்சார்த்திகள் நன்கு விளங்கிக்கொண்டிருக்கவில்லை. சிலர் குறுங்கால ஓட்டம் என்பது உயர்ந்தபட்ச வினைத்திறனில் நிலவும் தொழினுட்பத்தின் கீழ் குறித்த பொருள் ஒன்றை உற்பத்தி செய்வதற்கான காலத்தின் குறைப்பு எனவும் நீண்டகால ஓட்டம் என்பது அதிக காலம் எடுப்பதன் காரணமாக வினைத்திறன் குறைவடைகின்ற காலப்பகுதி எனவும் தவறாகக் குறிப்பிட்டிருந்தனர். மாறும் காரணிகள் மற்றும் நிலையான காரணிகள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு மிகக் குறைவாக இருப்பதையே இது காட்டுகிறது.

**(c)** தனியுரிமைப் போட்டியின் பண்புகளை எழுதுவதற்குப் பதிலாக, சில பரீட்சார்த்திகள் தனியுரிமைச் சந்தையின் பண்புகளை எழுதியிருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் மிகத் தெளிவான முறையில் விடை எழுதியிருந்ததுடன் இதற்கென ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**வினா இல. 04**

**(a)** இவ்வினா வர்த்தக வங்கியொன்றின் தொழிற்பாடுகள் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. சில பரீட்சார்த்திகள் வினாவைப் பற்றிய எவ்வித புரிதல்களும் இன்றி தவறான விடைகளை வழங்கியிருந்தனர். எவ்வாறாயினும், வேறு சிலர் சரியான விடை அளித்து இதற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்தப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(b)** இங்கு இலாபத்தன்மை மற்றும் திரவத்தன்மைக்கிடையிலான தொடர்பினை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கான புள்ளிகளைப் பெறத் தவறியிருந்தனர். அவர்களிடம் வினா பற்றிய சரியான புரிதல் காணப்படவில்லை. சிலர் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சிக்கவில்லை.

**(c)** இங்கு பணவீக்கத்திற்கான காரணங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் தவறான விடைகளையே வழங்கியிருந்தனர். பாடப் பரப்பு பற்றிய சரியான புரிதலைக் கொண்டிராததால் அவர்களால் புள்ளிகளைப் பெற இயலவில்லை. சிலர் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சிக்கவில்லை.

**வினா இல. 05**

**(a)** இவ்வினா சர்வதேச வர்த்தகத்தின் பிரதிகூலங்கள் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. குறிப்பிடத்தக்களவான பரீட்சார்த்திகளால் இவ்வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெற இயலவில்லை. சிலர் இவ்வினாவுக்கு விடையளித்திருக்கவில்லை. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் பூரணமான விடையளித்து வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(b)** இவ்வினா பாதுகாப்புவாதத்தின் அனுகூலங்கள் பற்றிப் பரீட்சித்திருந்தது. குறிப்பிடத்தக்களவான பரீட்சார்த்திகள் சரியான விடை அளித்திருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருக்கவில்லை.

**(c)** அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதியை மதிப்பிறக்கம் செய்வதன் மூலம் ஏற்படும் விளைவுகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருந்தனர். அளிக்கப்பட்டிருந்த பெரும்பாலான விடைகள் தவறானதாகவே இருந்தன. இது பாடத்திட்டத்தினுள் காணப்படும் பொருத்தமான காலத்தில் கேட்கப்பட்ட ஒரு வினாவாக இருந்த போதிலும் பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மிகவும் தாழ்ந்த மட்டத்திலேயே இருந்தது.

## பகுதி C

**வினா இல. 06**

**(A)** **(a)** இங்கு, சந்தை விலையில் மொத்த உள்நாட்டுச் செலவினத்தைக் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் தனியார் நுகர்வுச் செலவினங்கள், அரசாங்க நுகர்வுச் செலவினங்கள் மற்றும் மொத்த உள்நாட்டு நிலையான மூலதன உருவாக்கம் ஆகியவற்றை மாத்திரம் சேர்த்திருந்தனர், இது தவறானதாகும். அவர்கள் தொக்கு மாற்றங்களை சீராக்கம் செய்யாததன் காரணமாக தவறான விடைகளைப் பெற்றிருந்தனர்.

**(b)** இங்கு சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. மொத்த உள்நாட்டு உற்பத்தியைத் துணியும்போது நிகர ஏற்றுமதிகள் சீராக்கம் செய்யப்படவில்லை. சில பரீட்சார்த்திகள் ஏற்றுமதிகளை மாத்திரம் சீராக்கம் செய்திருந்தனர்.

**(c)** இங்கு சந்தை விலையில் மொத்தத் தேசிய வருமானத்தைக் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. மொத்தத் தேசிய வருமானத்தைத் துணியும்போது, நிகர வெளிநாட்டு முதன்மை வருமானம் சரியாக சீராக்கம் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகளால் கழித்தல் குறியீடு கவனத்தில் கொள்ளப்படாது அதனைக் கூட்டியிருந்தனர். இதனால் அவர்களால் புள்ளிகளைப் பெற முடியவில்லை.

**(B)** **(a)** இங்கு அரசாங்கத்தின் நாணயக் கொள்கைக்கும் நிதிக் கொள்கைக்கும் இடையிலான வேறுபாட்டை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் அரசாங்கத்தால் வடிவமைக்கப்பட்ட ஒரு தொகுதிப் பொதுவான எண்ணக்கருக்கள் நாணயக் கொள்கை எனக் குறிப்பிட்டிருந்தனர். இது தவறானதாகும். மேலும், அவர்கள் நிதிசார் எண்ணக்கரு அடிப்படையில் வடிவமைக்கப்பட்டதே நிதிக் கொள்கை எனக் குறிப்பிட்டிருந்தனர். இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமானதாக அமையவில்லை.

**(b)** இங்கு பாதீட்டுப் பற்றாக்குறை என்பதன் கருத்தைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்திருக்கவில்லை. அவர்களிடம் எண்ணக்கரு பற்றிய சரியான விளக்கமின்மையை இது காட்டுகிறது.

**(C)** இங்கு சந்தைப் பொருளாதாரத்தில் வினைத்திறனற்ற வகையிலான வள ஒதுக்கீட்டைத் தடுப்பதற்கு அரசாங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. சிலர் வளங்களுக்கு அதிகாரபூர்வ பெறுமானங்களைச் சேர்த்தல், பல்வேறு வரிகளை விதித்தல் போன்ற தவறான விடயங்களைக் குறிப்பிட்டிருந்தனர். இதனால் அவர்களால் புள்ளிகளைப் பெற இயலவில்லை. இவ்வினாவை பெரும்பாலானவர்கள் சரியாக விளங்கிக் கொள்ளவில்லை.

\- - -

**<u>பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** பாடத்திட்டத்தை முழுமையாகவும் பூரணமாகவும் படிப்பதுடன் புதிய பாட விடயங்கள் மீது அதிக கவனத்தையும் செலுத்தவும்.

**(2)** மிகக் கவனத்துடன் வினாவை வாசிப்பதுடன், நேரடி விடைகள் எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புக்களையோ விபரங்களையோ எழுத வேண்டாம்.

**(3)** வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் செவ்வை நிரல் வினாத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடைளித்தல் வேண்டும்.

**(4)** சுய கற்றல் ஏடு, புத்தகங்கள், கையேடுகள், மடல்கள், சஞ்சிகைகள், மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் மற்றும் பாடத்துடன் சம்பந்தப்பட்ட ஏனையவற்றை வாசிக்கவும்.

**(5)** வரைபுகளுக்குச் சரியாகப் பெயரிட்டு விபரிப்பதில் கவனம் செலுத்தவும்.

**(6)** கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும் என்பதுடன் வினா இலக்கங்கள் துல்லியமாக இடப்படுதல் வேண்டும்.

**(7)** வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

**(8)** கடந்தகால வினாத்தாள்களைச் செய்து பார்த்து, அவற்றை பரிந்துரைக்கப்பட்ட விடைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் அறிவை மேம்படுத்திக் கொள்ளவும்.

**(9)** சரியான நேர முகாமையில் கவனம் செலுத்தவும்.

**(10)** முன்னாயத்தத்துடனும் பரீட்சையை வெற்றிகொள்ளும் எதிர்பார்ப்புடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

\- * * * -